பொழுதுபோக்கை
ஒழுங்கமைத்தல்

சிறுவர்களும் சிறுமிகளும்

விளையாட்டுக்கள்,
உடல்விளையாட்டுக்கள்,
இயற்கை, இசை

சிநேகிதங்கள்
உருவாக்கல்

விறுவிறுப்பான
வீரச்செயல்களை
செய்தல்

இதுதான்
சுவிச்சர்லாந்தின்
இளவயதவர்களுக்கான
மிகப்பெரிய கழகம

உலகம் முழுவதும்
தொடர்புகொண்டிருத்தல்

battasendas

zur Verfügung gestellt durch die Pfadi Luzern und Pfadi Aargau

Dieser Flyer wurde mit freundlicher Unterstützung erstellt von:

- contakt-citoyenneté (Förderung interkullturelles Zusammenle-ben)
- Varieta (Kompetenzzentrum interkulturelle Öffnung SAJV)
- Eidgenössische Fachstelle für Rassismusbekämpfung FRB

## அன்புடன் வரவேற்கின்றோம

சாரணர்படையில் சேர்வது மிக இலகுவானது. சகல குழந்தைகளும் இளவயதினர்களும் எந்த நேரத்திலும் ”எங்களை வந்து பார்த்து அனுபவம் பெற” அழைக்கப்படுகிறார்கள்!

## கேள்விகள் உண்டா?

உங்கள் இடங்களில் உள்ள சாரண குழுப்பெண்நடத்துனர்களும் குழுஆண்நடத்துனர்களும் அவர்களின் செயல்பாடுகள் பற்றியும் சாரணர் பற்றியும் சொல்ல மிக ஆர்வாமாக இருக்கின்றனர். அத்துடன் உங்கள் கேள்விகளுக்கும் பதிலும் அளிப்பார்கள்.

**Kontaktadresse:**

tamilisch

# [சாரணர்]

யார் நாங்கள், நாங்கள் என்ன செய்கின்றோம

battasendas



## சாரணர்...

... சுவிச்சர்லாந்தில் 19000 க்கும் மேற்பட்ட சிறுமிகளும் 23000 க்கும் மேற்பட்ட சிறுவர்களும் கொண்ட இந்த மிகப் பெரிய இளவயதவர்களுக்கான கழகம்.

... சமயம் மற்றும் அரசியல் சம்மந்தப்படாதது.

... உலகம் முழுவதும் 40 மில்லியன் அங்கத்தவர்கள் 160 க்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கின்றனர்.

... குழந்தைகள் வசிக்கும் எல்லா இடங்களிலும், இது நடைபெறும்: பல வட்டாரங்களிலும், கிராமங்களிலும், நகரங்களிலும்.

## எங்கள் இலக்குகள்

சாரணர் என்பதின் அர்த்தம் மறக்கமுடியாத அனுபவங்கள், சிநேகிதம் மற்றும் சந்தோசம். அதே நேரத்தில் குழந்தைகள் படிக்கின்றார்கள்

- தங்களுக்கும் மற்றவர்களுக்கும் பொறுப்பேற்பதற்கு.
- சகலமாகப் பழகுவதற்கு மற்றும் ஒரு குழுவில் ஒருவருக்கொருவரை அனுசரித்துப்போவதற்கு.
- தங்களுடைய பொழுதுபோக்கை தாங்களாகவே ஒழுங்கமைப்பதற்கு.
- இயற்கையைப்பற்றிய அறிவதுடன் அதை பேணிப்பாதுகாத்து பொறுப்புடன் ஈடுபடுவதற்கு.

சாரணர்கள் தங்களுடைய செயல்பாடுகளை வயதிற்குத் தகுந்த வகையில் சுயமாகவே ஒழுங்குசெய்கின்றனர்.

## எங்களுடைய செயல்ப்பாடுகள்

நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும், வெளியே ஆனாலும், உள்ளே என்றாலும், எங்களுடைய நடவடிக்கைகள் குழந்தைகளினதும் இளவயதவர்களினதும் ஆர்வம் போல பலவிதமானதாக இருக்கும்:

- விடுமுறையை கூடாரத்தில் அல்லது விடுமுறைதங்குமிடத்தில், வெளியே சென்று அதிசயங்களையும் வீரச்செயல்களையும் அனுபவித்தல்.
- விடுமுறைத்தங்குமிட நெருப்பைச் சுற்றியிருந்து சுவாரஸ்யமாகக் கதைத்தல், விளையாடுதல் அத்துடன் சிரித்தல்
- ஓடிநன்றாக விளையாடுதல், விளையாடுதல், சமைத்தல், கைப்பணிவேலைசெய்தல்
- கயிற்றுப்பாலத்தில் ஏறுதல், குடிசை கட்டுதல்

மிக முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால் குழுவிடன் சேர்ந்து வாழுதல். திட்டங்கள் இங்குதான் உருவாக்கப்படுகின்றன, சிநேகிதங்கள் உண்டாக்கப்படுகின்றன, ஒருவருக்கு என்ன விடயம் முக்கியமோ அதைப்பற்றிக் கதைக்கப்படுகின்றன. கூடுதலாக சனிக்கிழமை பின்னேரங்களில் குழந்தைகள் சந்திப்பார்கள். அதிசிறந்த விடயமாக பாடசாலை விடுமுறையில் நடத்தப்படும் பொதுவான விடுமுறைத்தங்குமிட நிகழ்ச்சி உள்ளது.



## பலவிதமான குழுக்கள்

பீபர் «Biber» (5-7 வயது)
ஓநாய் "வொல்பி" «Wölfli» (6-11 வயது)
சாரணர்கள் «பார்டீஸ்» «Pfadis» (10-15 வயது)
பீயோஸ் «Pios» (14-17 வயது)

குழுப்பெண்நடத்துனர்களும் குழுஆண்நடத்துனர்களும் (குறைந்தது 17 வயது)
இள குழுப்பெண்நடத்துனர்களும் குழுஆண்நடத்துனர்களும் சிறுவயதிலேயே இந்தக் கடினமான கடமைக்குத் தயார்படுத்தப்படுகின்றனர். இக் கடமைக்கான கல்வியும் தொடர்கல்வியையும் அவர்கள் இத்தொழில் ஆற்றும் சிறந்த நிறுவனங்களுடன் சேர்ந்த கூட்டுவேலை மூலம் பெற்றுக்கொள்கின்றனர் (இளவயதினர் + விளையாட்டு).

சாரணர்கள் "பார்டீஸ்" என்ன இருந்தாலும் (பேரேஆ)
பேரேஆ என்பது உடலாலும், உள்ளத்தாலும அல்லது பலவகைகளில் ஊனஇடைச்சலுள்ள குழந்தைகளுக்காகவும் இளவயதினருக்காகவும் திறக்கப்பட்டிருக்கும் அத்துடன் இயலக்கூடியவகையில் பலவகையானவும் கற்பனையும்சேர்ந்த நடவடிக்கைகளின் மூலம் அவர்களது திறமைகளையும், கெட்டித்தனங்களையும் வெளிக்கொணரவைக்கும்.

## செலவுகள

ஒரு வருடத்திற்கு கிட்டத்தட்ட 70 பிராங்குகள். விடுமுறைத்தங்குமிடம், சுற்றுலா போன்ற நிகழ்ச்சிகளுக்கும் அத்துடன் சில விசேட பொருட்களுக்கும் இதற்கும் மேலாகச் செலவுகள் ஏற்படும் (சாரணர்சட்டை, முதுகில்தூக்கிச்செல்லும் றுக்சாக் என்ற பை முதலியன).